**வென்னப்புவ பிரதேச சபை**
**புத்தளம் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 10 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூலை 07 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வென்னப்புவ பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கை

பயன்பாட்டிற்கு எடுக்கப்படுகின்ற காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி மீள் மதிப்பீடு செய்யப்பட்டு காண்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், ரூபா 179,733,440 தொகையான காணி மற்றும் கட்டிடங்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், மீளாய்வாண்டின் போது மூலதனமாக்கப்பட்ட ரூபா 40,408,512 தொகையான காணிகளின் பெறுமதிகளிலும் நன்கொடை உரித்துறுதிகளில் உள்ள பெறுமதி காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அவைகளும் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் பெறுமதி சேர்க்கப்பட்ட வரியாக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு செலுத்துவதற்குள்ள ரூபா 636,898 கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்திருக்கும் போது கடன்பட்டோரின் கீழும் பெறுமதி சேர்வரியாக ரூபா 3,399,994 தொகை போலிச் சொத்தொன்றாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) காணாமல் போயிருந்த கொங்கிரீட் கலவை இயந்திரத்தின் பெறுமதி ரூபா 156,550 நட்டமாகக் கருதி சொத்துக் கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருந்த போதிலும், மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) முன்னைய ஆண்டின் போது கிடைத்திருந்த ரூபா 660,000 பெறுமதியான 600 கல்வனைஸ் குழாய்களில் 161 இன் பெறுமதியான ரூபா 177,100 தொகை நட்டம்

மற்றும் இழப்புக் கணக்கிலும், எஞ்சிய குழாய்களின் பெறுமதியான ரூபா 482,900 தொகை நிலையான சொத்துக்களின் கீழும் கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும், மொத்தப் பெறுமதியும் பொதுக் களஞ்சியக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

(அ) 06 கணக்கு விடயங்களுக்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளின் பிரகாரமான மீதிக்கும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான மீதிக்கும் இடையே ரூபா 14,501,118 தொகையான இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

(ஆ) வென்னப்புவ உப அலுவலகத்தின் வாடகை மற்றும் கடை வாடகைகளுக்குரிய உபயோகப் பதிவேடுகளின் பிரகாரமான மீதிக்கும் நிதிக்கூற்றின் பிரகாரமான மீதிக்கும் இடையே ரூபா 5,726,022 தொகையான இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

### 1.3.4 தொங்கல் கணக்கு

இலங்கை வங்கியின் வென்னப்புவ கிளையில் பேணிச் செல்லப்படுகின்ற 0001865986 ஆம் இலக்க நடைமுறைக் கணக்கிற்குரிய 2014 திசெம்பர் மாத வங்கி இணக்ககக்கூற்றில் வெளிப்படுத்தப்பட்ட ரூபா 384,602 தொகையான தொங்கல் கணக்கின் மீதியைத் தீர்ப்பதற்கோ அல்லது அது தொடர்பான விளக்கங்களைச் சமர்ப்பிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட ரூபா 492,273,413 பெறுமதியான 11 கணக்கு விடயங்கள் தொடர்பான பதிவேடுகள் மற்றும் விரிவான பட்டோலை போன்ற சான்றுகள் இன்மையினால் கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே காண்பிக்கப்படுகின்ற சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டம் | |
| (i) 136 ஆம் பிரிவு | சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள சபைக்குச் சொந்தமான குத்தகைக்கு வழங்கப்பட்ட அல்லது வாடகைக்கு வழங்கப்பட்ட சகல காணிகளினதும் கட்டிடங்களினதும் வாடகையாளர்களிடமிருந்து ஆதனவரி அல்லது ஏக்கர் வரி பிரதேச சபைக்குச் செலுத்த வேண்டியிருந்த போதிலும், சபைக்குச் சொந்தமான 245 ஆதனங்களுக்கு உரிய அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச்சட்டத்தின் 03 ஆம் அத்தியாயம்

---

| | |
|---|---|
| 20 ஆம் பிரிவு | வரிக்காக பதிவு செய்திருந்த ஒருவர் எனக் காண்பிப்பதற்கு வரிப் பட்டியல் பத்திரம் விநியோகிக்கப்பட வேண்டிய போதிலும், சபையினால் விலைப்பட்டியல் பத்திரம் இன்றி 2015 ஆம் ஆண்டின் போது 32 சந்தர்ப்பங்களில் ஒப்பந்தக்காரருக்கு பெறுமதி சேர் வரியாக ரூபா 879,883 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |

(இ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதி

---

| | | |
|---|---|---|
| (i) | 2(1)(இ) ஆம் இலக்க மற்றும் 3 ஆம் இலக்க விதிகள் | சபையின் பதவியணியினர்களுக்கு கையளிக்கப்படுகின்ற பணிகள் தாமதமின்றியும் சரியான வகையிலும் நிறைவேற்றப்படுகின்றமையை கண்காணித்துக் கொள்ள வேண்டிய போதிலும், 2015 ஆம் ஆண்டிற்கான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களில் பௌதீக செயல்முன்னேற்றம் கணிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 5(3) ஆம் இலக்க விதி | வருமானங்களைச் சேகரிப்பது தொடர்பாக போதியளவான உள்ளகப் பரிசோதனையொன்று நடாத்தப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | 5(6) ஆம் இலக்க விதி | உரிய உத்தியோகத்தர்கள் குறித்த கால எல்லையில் பிரதேச சபைக்கு அறவிடவேண்டியிருந்த சபை வருமானங்கள் மற்றும் ஏனைய கட்டணங்கள் என்பன சேகரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | 10(2) ஆம் இலக்க விதி | ஒவ்வொரு செயற்திட்டத்தையும் அமுல்படுத்தும் போது ஆரம்பிப்பதற்கு இலக்கிடப்பட்ட திகதியைத் தீர்மானிப்பதற்கும் இலக்கிடப்பட்ட திகதிக்கு இணங்கும் வகையில் ஒவ்வொரு செயற்திட்டமும் அமுல்படுத்தப்படுகின்றமை காண்காணிப்பட்டிருக்கவில்லை. |
| (v) | 10(8) ஆம் இலக்க விதி | சபையின் சகல சொத்துக்களினதும் பாதுகாப்பினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், சபைக்குச் சொந்தமாக இருந்த கொங்கிரீட் கலவை இயந்திரம், ஹீனோ மோட்டார் வாகனம் மற்றும் நேரம் பதியும் இயந்திரம் என்பன காணாமல் போயிருந்தன. |

| | |
|---|---|
| (vi) 59 ஆம் இலக்க விதி | ஒவ்வொரு வருட ஆரம்பத்தின் போதும் சபை அதிகாரப் பிரதேசத்தில் மெய்மையாய்வு ஒன்று மேற்கொண்டு கைத்தொழில் தொடர்பான பட்டியலொன்று தயாரித்து உரிய ஆண்டின் மார்ச் 31 ஆந் திகதி அல்லது அதற்குமுன் செயலாளருக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (vii) 218 ஆம் இலக்க விதி | சபையின் சகல காணிகளும் கட்டிடங்களும் வருடத்திற்கு ஒரு தடவை பரீட்சிப்பதற்கு மெய்மையாய்வுச் சபை நியமிக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஈ) அரச நிர்வாகச் சுற்றறிக்கை

| | |
|---|---|
| 2015 மே 20 ஆந் திகதிய 2015/11 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தி | சபை 2015 ஆம் ஆண்டிற்கான சீருடைப் படிகளுக்காக ரூபா 607,400 தொகை செலவிட்டிருந்த போதிலும், சபையின் எந்தவொரு உத்தியோகத்தரோ அல்லது ஊழியரோ, குறித்த சீருடையை அணிந்திருக்காதிருந்தமை 2016 ஏப்ரல் 05 ஆந் திகதி மேற்கொண்ட பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 37,799,622 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 38,599,107 ஆக இருந்தது. மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் முறையே ரூபா 26,389,584 மற்றும் ரூபா 80,436,306 தொகையான மூலதன வருமானம் மற்றும் ரூபா 48,771,228 மற்றும் ரூபா 118,490,311 தொகையான மூலதனச் செலவினங்கள் கணிப்பீடு செய்யப்பட்டதன் பின்னர் மிகை ரூபா 15,417,979 ஆக இருந்ததுடன், முன்னைய ஆண்டின் மிகை ரூபா 545,102 ஆக இருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 14,872,877 தொகையான அதிகரிப்பைக் காணமுடிந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

(அ) மீளாய்வாண்டின் போது சபையின் மொத்த செயற்பாட்டு வருமானம் ரூபா 226 மில்லியனாக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டின் மொத்த செயற்பாட்டு வருமானம் ரூபா 193 மில்லியனுடன் ஒப்பிடும் போது ரூபா 33 மில்லியன் அதிகரிப்பாகும்.

(ஆ) மீளாய்வாண்டின் போது மூலதனச் செலவினம் ரூபா 48 மில்லியனாக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டின் மூலதனச் செலவினமான ரூபா 118 மில்லியனுடன் ஒப்பிடும் போது ரூபா 70 மில்லியன் குறைவாகும்.

(இ) மேற்கூறப்பட்ட நிலைமையைக் காரணமாகக் கொண்டு ஆண்டிற்கான மிகை ரூபா 15 மில்லியனாக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டின் மிகையான ரூபா 0.5 மில்லியனுடன் ஒப்பிடும் போது ரூபா 14.5 மில்லியன் நிதி விளைவில் அதிகரிப்பாகும்.

**2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

தலைவரினால் மீளாய்வாண்டிற்காகவும் முன்னைய ஆண்டிற்காகவும் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2015 | | | 2014 | | |
|---|---|---|---|---|---|---|
| **வருமான விடயம்** | **பாதிடப்பட்ட** | **உள்ளபடியான பெறுவனவு** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்டநிலுவை** | **பாதிடப்பட்ட** | **உள்ளபடியான பெறுவனவு** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்டநிலுவை** |
| | **ரூபா'000** | **ரூபா'000** | **ரூபா'000** | **ரூபா'000** | **ரூபா'000** | **ரூபா'000** |
| வீதவரியும் வரியும் | 9,645 | 9,082 | 5,736 | 9,727 | 8,816 | 5,941 |
| வாடகை | 35,786 | 25,340 | 1,958 | 47,515 | 24,874 | 1,978 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 4,606 | 1,956 | - | 7,908 | 3,922 | - |
| ஏனைய வருமானம் | 64,067 | 182,304 | 125,543 | 7,430 | 5,622 | 2,381 |

## 2.3 வருமான நிர்வாகம்

மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட வருமான பட்டியலிடல், வருமான சேகரித்தல் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமானத் தலைப்பு | வருமான பட்டியலிடல் | | | வருமான சேகரித்தல் | | | | நிலுவை வருமானம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2015-01-01 இல் உள்ளவாறு நிலுவை | 2015 ஆம் ஆண்டின் பட்டியலிடல் | மொத்தம் | நிலுவையில் சேகரிக்கப்பட்ட தொகை | பட்டியலிடலில் சேகரிக்கப்பட்ட தொகை | எதிர்வரும் ஆண்டிற்காக கிடைத்த தொகை | சேகரிக்கப்பட்ட தொகை | நிலுவையில் மிகுதித் தொகை | பட்டியலிடப்பட்ட வருமானத்தில் நிலுவை | மொத்தம் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| ஆதனவரி | 5,636,264 | 9,084,081 | 14,720,345 | 1,819,128 | 6,999,637 | 1,352,811 | 10,171,576 | 3,817,136 | 2,084,444 | 5,901,580 |
| ஏக்கர் வரி | 304,556 | 14,724 | 319,280 | 27,899 | 6,096 | 1,277 | 35,272 | 276,657 | 8,628 | 285,285 |
| நீர் வரி | 3,446 | | 3,446 | | 34,775 | | 34,775 | 3,446 | 34,775 | 38,221 |
| கடை வாடகை | 2,371,207 | 6,194,269 | 8,565,476 | 1,578,348 | 4,294,104 | 121,635 | 5,994,088 | 792,858 | 1,900,164 | 2,693,022 |
| வாடகை | 1,978,367 | 25,315,540 | 27,293,907 | 185,421 | 25,119,217 | 1,951,851 | 27,256,489 | 1,792,946 | 196,322 | 1,989,268 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 10 | 1,966,550 | 1,966,560 | | 1,966,550 | | 1,966,550 | 10 | | 10 |
| ஏனைய வருமானம் | 119,826,014 | 188,021,195 | 307,847,209 | 1,809,319 | 62,920,510 | | 64,729,829 | 118,016,695 | 125,100,684 | 243,117,379 |

**2.3.3 ஆதனவரி**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது அறவிடப்பட வேண்டிய ஆதனவரித் தொகையிலிருந்து 65 சதவீத வரிவிகிதமொன்று அறவிடப்பட்டிருந்ததுடன், ஆண்டின் இறுதி நிலுவை ஆதனவரி அளவை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 267,919 இனால் அதிகரித்திருந்தது. அவ்வாறே ஆதனவரி பட்டியலிடல் ரூபா 32,973 ஒட்டுமொத்தக் குறைவொன்று வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 02 உப அலுவலகங்களின் ஆதனவரி பட்டியலிடல் ரூபா 33,797 தொகை குறைவாக மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 143 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள சகல காணிகளும் கட்டிடங்களும் 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும், சபையில் காணப்படும் ஆதனங்களின் மதிப்பீடு 07 வருடங்களை விஞ்சியிருந்தது.

(இ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 143(i)(2) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஆதனவரி மதிப்பீட்டின் பின்னர் நிர்மாணிக்கப்படுகின்ற கட்டிடங்களுக்காக புதிதாக மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு ஆதனவரி அறவிடப்பட வேண்டிய போதிலும், 2015 ஆம் ஆண்டில் 72 தரச் சான்றிதழ் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும், 2015 ஆம் ஆண்டில் புதிதாக ஒரு வரி அலகு மாத்திரமே சேர்க்கப்பட்டிருந்தது.

(ஈ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஆதனவரி மற்றும் ஏக்கர் வரி நிலுவைப் பணத்தை அறவிடுவதற்காக அந்த வரி செலுத்த வேண்டிய நபர்களின் அசையாத மற்றும் அசையும் ஆதனங்களை தடுத்து வைத்து விற்பனை செய்வதற்காக சபையின் செயலாளரினால் சபையில் பணத்தைச் சேகரிப்பவர்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி இலக்கம் 33 இன் படி ஆதனவரி செலுத்துவதைப் புறக்கணிக்கின்ற வரியிறுப்பாளர்கள் தொடர்பான பட்டியலொன்றும், சொத்துக்களை தடுத்து வைக்கும் ஆணை ஒவ்வொரு காலாண்டு இறுதியின் போதும் ஆதனவரி எழுதுவினைஞரால் தயாரித்து செயலாளரின் கையொப்பத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.3 ஆதனங்களை வாடகைக்கு வழங்குதல்**

(அ) மீளாய்வாண்டின் போது சபைக்குச் சொந்தமான 73 ஆதனங்களில் 19 ஆதனங்கள் வாடகைக்கு வழங்கப்படாதிருந்ததுடன் ஆகக்குறைந்த கேள்விப் பெறுமதியை அடிப்படையாகக் கொள்வோமாயின் இழக்கப்பட்ட வருமானம் ரூபா 9,988,102 ஆகும்.

(ஆ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 159(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையினால் வாடகைக்கு வழங்கப்பட்ட ஏதாவது இடமொன்றின் வாடகையாக அறவிட வேண்டிய தொகை அறவிடவேண்டியதாகக் காணப்பட்ட திகதி முதல் 14 நாட்களுக்குள் செலுத்தாதிருக்குமாயின் பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள அந்த வாடகை குடியிருப்பாளருக்கு சொந்தமாகவுள்ள சகல அசையாத மற்றும் அசையும் ஆதனங்களைத் தடுத்துவைத்து விற்பனை செய்து அத்தொகையையும் கட்டணத்தையும் அறவீடு செய்ய முடியுமாக இருந்த போதிலும் அவ்வாறு செயற்படாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

## 2.3.4 ஏனைய வருமானம்

(அ) சபையினால் வென்னப்புவ மற்றும் தங்கொட்டுவ என்ற இரண்டு நகரங்களிலும் முச்சக்கர வண்டி தரிப்பிடங்களைப் பதிவு செய்தல் கட்டணம் மற்றும் வென்னப்புவ பேரூந்து தரிப்பிடக் கட்டணம் என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 154(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபை எல்லைக்குள் அமைந்துள்ள காணி விற்பனையிலிருந்து பெறப்பட்ட பணத்தில் ஒரு சதவீதம் பிரதேச சபைக்கு அறவிடவேண்டியிருந்த போதிலும், மதிப்பீட்டு விற்பனைத் தொகையில் ஒரு சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(இ) சபை அதிகாரப் பிரதேசத்தில் அறிவித்தல் பதாதை பாரியளவில் 2016 சனவரி 13 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டிருந்த போதிலும், 2015 ஆம் ஆண்டிற்காக 43 அறிவித்தல் பதாதைகளுக்கு மாத்திரமே கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் கீழே காண்பிக்கப்படுகின்ற பிரிவிலிருந்து வருமானங்களைச் சேகரிப்பதற்கு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

i. உல்ஹிட்டியாவ பிரதேசத்தில் தினந்தோறும் நடாத்திச் செல்லப்படுகின்ற சில்லறை மீன் வியாபாரம்.
ii. பிரதேசத்தில் அமைந்துள்ள 14 நடமாடும் தொலைபேசிக் கோபுரங்களுக்காக கட்டணம் விதித்து அறவிடல்.
iii. பிரதேசத்தில் காணப்படுகின்ற வாடகை வாகனத் தரிப்பிடத்திற்காக கட்டணம் விதித்து அறவிடல்.

## 2.3.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 149 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் சபை எல்லைக்குள் அமைந்துள்ள இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவு செய்துள்ள 10 வியாபார நிறுவனங்களில் 04 நிறுவனங்கள் நியதிகளின் படியான அனுமதிப்பத்திரக் கட்டணம் செலுத்தாதிருந்ததுடன் இந்த நிறுவனங்களிலிருந்து அறவிடப்பட்ட கட்டணங்களுக்காக பெறுமதிசேர் வரி தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மற்றும் முத்திரை வரி என்பன அறவிடப்பட்டு அனுப்பிவைக்கப்படாமையால் அரசினால் இழக்கப்பட்ட வரி வருமானம் 2014 ஆம் ஆண்டிற்காக ரூபா 244,780 தொகையும் 2015 ஆம் ஆண்டிற்காக ரூபா 214,648 தொகையும் ஆக இருந்தன.

## 2.3.6 நீதிமன்றத் தண்டப்பணம்

வடமேல் மாகாணத்தின் பிரதம செயலாளரிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 5,693,259 தொகையான நீதிமன்றத் தண்டப்பணம் அறவிட வேண்டியிருந்தது.

## 2.3.7 முத்திரைக் கட்டணம்

மீளாய்வாண்டின் இறுதியில் வடமேல் மாகாண பிரதம செயலாளரிடமிருந்து அறவிட வேண்டிய முத்திரைக் கட்டணங்களின் பெறுமதி ரூபா 16,301,623 ஆகும்.

## 2.4 மிகைக் கட்டணம்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(3) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் பொறுப்புவாய்ந்த தரப்பினருக்கு எதிராக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் விதிக்கப்பட்ட மிகை விதிப்பின் பிரகாரம் 2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடுவதற்கிருந்த மிகைக் கட்டணம் ரூபா 326,335 ஆக இருந்தது.

## 3. செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் சபையின் பாதீடு மற்றும் உள்ளபடியான செலவினங்கள் என்பன உரிய முரண்களுடன் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவின விடயம் | 2015 பாதீடு செய்யப்பட்ட செலவினம் | 2015 உள்ள படியான செலவினம் | 2015 முரண்கள் | 2014 பாதீடு செய்யப்பட்ட செலவினம் | 2014 உள்ள படியான செலவினம் | 2014 முரண்கள் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| ஆளணி வேதனம் | 88,418 | 113,472 | (25,054) | 65,081 | 74,392 | (9,311) |
| ஏனையவை | 89,218 | 74,036 | 15,182 | 103,232 | 80,606 | 22,626 |
| உப மொத்தம் | 177,636 | 187,508 | (9,872) | 168,313 | 154,998 | 13,315 |
| மூலதனச் செலவினம் | 95,300 | 48,006 | 47,294 | 47,791 | 118,490 | (70,699) |
| | 272,936 | 235,514 | 37,422 | 216,104 | 273,488 | (57,384) |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை வங்கியின் வென்னப்புவ கிளையில் பேணப்படுகின்ற 0001865986 ஆம் இலக்க நடைமுறைக் கணக்கின் வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டின் மே மாதத்திலிருந்து முன்கொண்டு வரப்படுகின்ற ரூபா 33,955 பெறுமதியான மதிப்பிழந்த காசோலைகளுக்குரிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2009 செப்தெம்பர் 25 ஆந் திகதிய 1574 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வெளியிடப்பட்ட ஆலோசனையின் பிரகாரம் அபிவிருத்தியடைந்த கிராமப் பிரதேசங்களில் புதிய ஆதனவரி அலகுகள் துரிதமாக இனங்காணப்பட்டு வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட காணிகளில் கஹட்டவில மகுல்ல கஹவத்த அல்லது கஜுகஹவத்த காணிக்காக பொது வசதிகளுக்காக பெறவேண்டிய 52.4 பேர்ச் காணிப் பகுதி சபைக்குக் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 இனங்காணப்பட்ட நட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபைக்குச் சொந்தமாகக் காணப்பட்ட ரூபா 156,550 பெறுமதியான கொங்கிரீட் கலவை இயந்திரம் காணாமல் போயிருந்த போதும் அதற்கான பொறுப்பைத் தீர்மானித்து அந்த நட்டத்தை பொறுப்புவாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வென்னப்புவ சந்தைத் தொகுதியில் 4440 சதுர அடியினைக் கொண்ட மேல்மாடி 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து வருமானமொன்று இன்றி வியாபாரச் சங்கம் மற்றும் ஏனைய அமைப்புக்களுக்கு கையளிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு சபைக்குச் சொந்தமான சொத்துக்கள் வெளித்தரப்பினர்களுக்கு அறவீடுகள் இன்றி கையளிக்கப்பட்டமையால் சபை நிதியத்திற்கு பெறக் கூடியதாக இருந்த வருமானம் ரூபா 255,000 தொகை இழக்கப்பட்டிருந்தது.

(இ) மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சிலிருந்து கிடைத்த 161 கல்வனைஸ் குழாய்கள் காணாமல் போயிருந்ததுடன் அதன் பெறுமதி ரூபா 177,100 ஆக இருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தில் போதியளவான பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய PFD/RED/01/04/2014/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 04(அ) முதல் (ஊ) வரையான பந்திகளின் பிரகாரம் நீண்ட கால நோக்குடன் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக இலக்கிடப்பட்ட செயற்பாடுகளை உள்ளடக்கி வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அதற்கு மாற்றமான முறையில் செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்தது.

### 5.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 5.3.1 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சிலிருந்து 2015 யூன் மாதத்தில் கிடைத்த WPLL - 7703 ஆம் இலக்க FOTON என்ற தண்ணீர் பவுசர் கணக்காய்வுத் திகதியான 2016 பெப்ரவரி 08 வரையிலும் எந்தப் பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாது தரித்து வைக்கப்பட்டிருந்தது. வென்னப்புவ பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் குடியிருப்பாளர்களுக்கு பவுசர் மூலம் தண்ணீர் பெற்றுக் கொள்ளும் தேவையொன்று இல்லாதிருக்கும் போது அவ்வாறான தேவையுள்ள வேறொரு இடத்திற்கு தொடர்புபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமல் விளைவற்ற வகையில் வைக்கப்பட்டிருந்தது.

### 5.3.2 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்

காணிகளைக் கூறுகளாக்கி விற்பனை செய்யும் போது பொது வசதிகளுக்காக சபைக்கு வழங்கப்பட்ட காணிக் கூறுகள் மெய்மையாய்வுச் சபையின் மூலம் மெய்மையாய்வு செய்யப்பட்டு உரித்தை உறுதிப்படுத்தி, பாதுகாத்துக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.4 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| ஊழியர் தரம் | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளபடியான | வெற்றிடங்கள் | மிகை |
|---|---|---|---|---|
| பதவிநிலை | 05 | 04 | 01 | - |
| மூன்றாம் | 64 | 60 | 04 | - |
| ஆரம்ப | 110 | 188 | - | 78 |
| | 179 | 252 | 05 | 78 |

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) பதவி நிலைத் தரத்தின் பதவிக்காக தொழில்நுட்ப உத்தியோகத்தர் (விஷேட தரம்) பதவி சில வருட காலமாக வெற்றிடமாகக் காணப்பட்டது.

(ஆ) இரண்டாம் தரத்தில் அங்கீகரிக்கப்படாத பதவியொன்றிற்காக ஒருவரும் ஆரம்ப தரத்தின் அங்கீகரிக்கப்படாத 05 பதவிகளுக்காக 64 பேரும் சேர்க்கப்பட்டிருந்தனர். எனினும் அந்த பதவிகளை அங்கீகரித்துக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிர்வாகம்
(ஈ) ஒப்பந்த நிர்வாகம்
(உ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(ஊ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(எ) ஊழியர் கடன் முகாமைத்துவம்